### முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு!

# நம்பிக்கை வாக்கெடுப்பில் திருப்பத்தூர் த.வெ.க. எம்.எல்.ஏ., பங்கேற்க தடை!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

*சென்னை, மே 14-*

*திருப்பத்தூர் தொகுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற த.வெ.க. எம்.எல்.ஏ., சீனிவாச சேதுபதி, பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.*

*நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற த.வெ.க. வேட்பாளர் சீனிவாச சேதுபதி சட்டப்பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்க தடை விதிக்கக் கோரி திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் வழக்கு தொடர்ந்திருந்தார். அவரது மனுவில், சிவகங்கை திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்கு திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப்பப்பட்டதால் அந்த வாக்கை மீட்டு சரிபார்க்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.*

*இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எல்.விக்டோரியா கவுரி மற்றும் என்.செந்தில் குமார் அமர்வு, தபால் வாக்கு வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்டது குறித்து திமுக வேட்பாளர் அனுப்பிய புகார் மனுவுக்கு பதிலளிக்காதது குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தேர்தல் ஆணையம் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்த மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜகோபாலன், இந்த பிரச்சினை தொடர்பாக தேர்தல் வழக்கு தான் தொடரமுடியும். நள்ளிரவு வரை வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அப்போது எந்த ஆட்சேபமும் தெரிவிக்கப்படவில்லை. முடிவுகள் வெளியிடப்பட்ட பின் தேர்தல் ஆணையத்தின் பணிகள் முடிவடைந்து விட்டது. தபால் வாக்கு வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்டு விட்டதாகக் கூறுவது கற்பனையானது. தபால் வாக்கு தொகுதி மாறி அனுப்பப்பட்டுள்ளதாகக் கூற எந்த ஆதாரங்களும் இல்லை என தெரிவித்தார். பெரியகருப்பன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, தபால் வாக்கு வேறு தொகுதிக்கு மாறியுள்ளதற்கு ஆதாரம் இல்லை என்பது தவறு. வாக்கு மாறி வந்தது குறித்து தேர்தல் அதிகாரியே தகவல் தெரிவித்திருக்கிறார். தபால் வாக்கு தொகுதி மாறி அனுப்பப்பட்டுள்ளது என்பதை தேர்தல் ஆணையம் மறுக்கவில்லை.*

*தபால் வாக்கு வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்டிருந்தால் என்ன நடைமுறை பின்பற்ற வேண்டும் என சட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார். அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர்.*

*இந்த நிலையில் இந்த வழக்கில் நீதிபதிகள் எல். விக்டோரியா கௌரி, என். செந்தில் குமார் அமர்வு நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. அதில், "பெரியகருப்பன் அளித்த புகாருக்கு போதுமான ஆதாரம் உள்ளது. அதனால், நீதிமன்ற மறு உத்தரவு வரும் வரை சட்டமன்றத்தில் நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பு, நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு உள்ளிட்ட எதிலும் திருப்பத்தூர் தவெக சட்டமன்ற உறுப்பினர் சீனிவாச சேதுபதி கலந்து கொள்ள தடை விதிக்கப்படுகிறது.*

*சீனிவாச சேதுபதியின் தேர்தல் வெற்றியை நீதிமன்றம் ரத்து செய்யவில்லை. அதே சமயம், அவரது தேர்தல் வெற்றியை ஏற்றுக் கொள்வதாகவும் கருதக் கூடாது. வாக்கு எண்ணிக்கை சுற்று விவரங்கள் மற்றும் மின்னனு வாக்குகள், தபால் வாக்குகள், நிராகரிக்கப்பட்ட தபால் வாக்குகள், அதன் கவர்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் பாதுகாப்பாக தேர்தல் ஆணையம் வைத்திருக்க வேண்டும். திருப்பத்தூர் தொகுதி எண் 185க்கு அதே பெயரில் உள்ள திருப்பத்தூர் தொகுதி எண் 50 இல் இருந்து தபால் வாக்குகள் வந்திருந்தால் அதை திறக்காமல் பாதுகாத்து வைக்க வேண்டும். ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற இந்த உத்தரவால், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.*

*இது மறு வாக்கு எண்ணிக்கைக்கானது எனவும் கருத கூடாது" என கூறப்பட்டுள்ளது.*

*மேலும், "திருப்பத்தூர் தொகுதியில் எத்தனை தபால் வாக்குகள் உள்ளன? அதில் எத்தனை வாக்குகள் பதிவாகின? வேறு தொகுதிக்கு எத்தனை வாக்குகள் சென்றன? என்று தேர்தல் ஆணையம் விசாரணை செய்ய வேண்டும். தபால் வாக்குகள் மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது எடுக்கப்பட்ட காணொலி காட்சிகள் அனைத்தையும் பாதுகாப்பாக வைக்க வேண்டும்" என தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.*

## கேள்விக் கென்ன பதில்?

**கேள்வி:** *இந்த மே மாதம் 3 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட "நீட்" தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்கிறதே ?*

**பதில்:** வினாத்தாள் முன் கூட்டியே வெளியானது உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளின் காரணமாக நடந்த "நீட்" தேர்வை ரத்து செய்திருக்கிறார்கள். மறு தேர்வு நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"நீட்" தேர்வு முறைகேடுகள் என்பது புதியதல்ல. ஒவ்வோராண்டும் முறைகேடுகள் நடந்த வண்ணம்தான் உள்ளன.

நடந்த தேர்வை ரத்து செய்வதாலும், மறு தேர்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், மருத்துவப் படிப்பை வாழ்நாள் நோக்கமாகக் கொண்டு உழைத்துப் படித்துப் பாடுபட்ட லட்சக்கணக்கான மாணவ, மாணவியரும், பெற்றோரும் தாங்கவொண்ணா மன அழுத்தத்திற்கும், கவலைக்கும், தேவையில்லா பணச் செலவுகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

முறைகேடுகளுக்கும், மன அழுத்தத்திற்கும், பணச் செலவுக்கும் வழிவகுத்து வரும் "நீட்" தேர்வு முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் என்பதுதான் தொடக்கம் முதலே தி.மு.க.வின் நிலைப்பாடு.

# தமிழ்நாட்டில் - தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் ஒலிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

தலைவரை இன்றைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையில் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களுக்கும், துணைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய ரவிசங்கர் அவர்களுக்கும் எங்கள் தலைவர் சார்பாகவும், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே ஏற்கனவே எல்லோரும் குறிப்பிட்டதைப் போல நீங்கள் எப்பொழுதுமே சிரித்த முகத்திற்குச் சொந்தக்காரர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல எல்லோரிடமும் மிகுந்த அன்போடு பழகக்கூடியவர் என்று பலர் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இதே சட்டப் பேரவையில் 1980ஆம் ஆண்டுத் தேர்தலிலும் 2011 சட்டமன்றத் தேர்தலிலும் நீங்கள் வெற்றி பெற்று ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறீர்கள். எனவே பேரவையின் மரபுகளும் விதிகளும் உங்களுக்குப் புதியது கிடையாது.

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று முறையும் ஆளுங்கட்சி உறுப்பினராகச் சட்டமன்றத்திற்குள் வந்திருக்கிறீர்கள்.

இந்த முறை எதிர்க்கட்சிகளையும் அரவணைத்துச் செயல்படுகின்ற ஒரு பேரவைத் தலைவராக நீங்கள் பொறுப்பேற்று இருக்கிறீர்கள். அந்தப் பொறுப்பில் மிகச் சிறப்பாக நடுநிலைமையோடு செயல்படுவீர்கள் என்பது தான் எங்கள் அத்தனை பேருடைய எதிர்பார்ப்பு.


அதேபோல ஒரு எளிய பின்னணியில் இருந்து வந்து முதன்முறையாகச் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ரவிசங்கர் அவர்கள் பேரவையின் துணைத் தலைவராக உங்களுக்கு உறுதுணையாக இருந்து இந்த அவையை வழிநடத்துவார் என்று நாங்கள் அத்தனை பேரும் நம்புகிறோம்.

### பேரவையில் தொடர வேண்டிய அரசியல் நாகரிகம்!

பேரவைத் தலைவர் அவர்களே! நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று எங்களுடைய தலைவருடைய வீடுகளுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் வீடுகளுக்கும் சென்று வாழ்த்துகள் பெற்றுக்கொண்டு சென்றார். அந்த அரசியல் நாகரிகம் இந்தப் பேரவையிலும் தொடர வேண்டும் என்பதுதான் எங்களின் எண்ணம், எதிர்பார்ப்பு.

ஏற்கனவே நான் சொல்லி இருந்தாலும் மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டப் பேரவையில் எதிரி கட்சியாக இல்லாமல் ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக நிச்சயம் செயல்படும். எங்கள் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஒரு ஆக்க சக்திதான்.

பேரவைத் தலைவர் அவர்களே! இந்தப் பேரவைக்கென்று ஒரு மிகப்பெரிய வரலாறு இருக்கிறது. இன்றைக்கு இந்தியாவில் பண்பாட்டு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தமிழ்நாடு சிறப்பாக முன்னேறி இருக்கிறது என்றால்



முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (12.5.2026) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜே.சி.டி. பிரபாகரை, சட்டப்பேரவை தலைவர் இருக்கையில், அவை முன்னவர் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் அமர வைத்தனர்.

இந்தப் பேரவையில் நடந்த விவாதங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள், இயற்றப்பட்ட சட்டங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இவையெல்லாம்தான் காரணம்.

### நடுநிலையோடு செயல்பட வேண்டும்!

பிற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக, வழிகாட்டக்கூடிய வகையில் செயல்பட்டு இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த சட்டமன்றப் பேரவை இந்தத் தமிழ்நாட்டு சட்டமன்றப் பேரவை. அப்படிப்பட்ட இந்தப் பேரவையில் ஆரோக்கியமான ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு இடம் கொடுத்து ஜனநாயக மாண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேரவைத் தலைவர் அவர்கள் என்றைக்கும் நடுநிலைமையோடு செயல்பட வேண்டும் என்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம்.

நாம் இங்கே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று எதிரெதிர் வரிசையில் உட்கார்ந்து இருந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சி என்று வரும் பொழுது நாம் அனைவரும் ஒரே வரிசையில் முன் வரிசையில் நின்று உழைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதைத்தான் தமிழ்நாட்டு மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், விரும்புகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் அதைத்தான் விரும்புகிறது.

எங்களுடைய தலைவர் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அடிக்கடி சொல்கின்ற ஒரு வார்த்தை, "இது எனது அரசு அல்ல நமது அரசு" என்று எங்களுடைய தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். அதை நிரூபித்தும் காட்டியிருக்கிறார். சென்ற திராவிட மாடல் அரசு என்பது வாக்களித்த மக்களுக்கு மட்டும் இல்லாமல் வாக்களிக்காத மக்களுக்குமான அரசாகத்தான் செயல்பட்டு வந்தது.

ஆகவே இந்தப் புதிய அரசும் அனைவருக்குமான அரசாக, உங்களுக்கு வாக்களிக்காத மக்களுக்குமான அரசாகச் செயல்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

### தமிழ்நாட்டின் நலன்தான் மிக முக்கியம்!

இந்த நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற நானும் ஒரே கல்லூரியில் படித்த பழைய மாணவர்கள். ஒரே கல்லூரியில் நாம் படித்திருந்தாலும் அரசாங்கத்தை நடத்துவதில் தி.மு.க தான் சீனியர் பேட்ச், அது உங்களுக்குத் தெரியும். 1967லேயே ஆட்சிக்கு வந்தது தி.மு.க. நாங்கள் தான் சீனியர்ஸ். அந்த அடிப்படையில் எங்களின் அறிவையும் அனுபவத்தையும் நாங்கள் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம். அதை ஏற்றுக்கெள்ள நீங்களும் தயாராக இருங்கள். ஏனென்றால் நமக்கு எப்போதுமே தமிழ்நாட்டு மாநிலத்தின் நலன் தான் மிக மிக முக்கியம்.

பேரவைத் தலைவர் அவர்களே! நீங்கள் போட்டியின்றித் தேர்வாகி இருக்கிறீர்கள். முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரான நானும் அவை முன்னவரும் உங்களை இந்த இருக்கையில், அமர வைத்திருக்கிறோம். இன்றைக்கு உங்கள் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டுவந்து உட்கார வைத்திருக்கிறோம். இனி எங்கள் இரண்டு தரப்பையும் நீங்கள் தான் கையைப் பிடித்து அரவணைத்து கோபம் இல்லாமல், கோபப்படாமல் நீங்கள் கோபப்பட மாட்டீர்கள் என்று தெரியும் உங்களைக் கோபப் படுத்துகின்ற மாதிரி எந்தச் செயலையும் நாங்கள் செய்ய மாட்டோம். இரண்டு தரப்பையும் நீங்கள் வழிநடத்த வேண்டும்.

### சட்டப் பேரவையின் கூடுதல் சிறப்பு!

சட்டமன்ற ஜனநாயகத்தில் ஆளுங்கட்சி காதுகளாகவும் எதிர்க்கட்சி குரலாகவும் இருக்க வேண்டும். அதில் தான் இந்த அவையின் பெருமை நிச்சயம் அடங்கி இருக்கிறது. பொதுவாக இதற்கு முந்தைய சட்டமன்றப் பேரவையை எடுத்துக் கொண்டால் ஆளுங்கட்சி வரிசையில் அதிக உறுப்பினர்களும் எதிர்க்கட்சி வரிசையில் அதைவிடக் குறைவான உறுப்பினர்களும் இருப்பார்கள். ஆனால் இந்த முறை கிட்டத்தட்ட ஆளுங்கட்சிக்கு இணையான எதிர்க்கட்சி வரிசை வலிமையாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. அதுதான் இந்தப் பேரவையின் இன்னொரு கூடுதல் சிறப்பு.

இதன் மூலமாக தமிழ்நாட்டு மக்கள் ஒரு முக்கியமான செய்தியை நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால், எதிர்க்கட்சி வரிசை மிக மிக வலிமையாக இருந்து இந்த அரசை, புதிய அரசை வழிநடத்த வேண்டும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன் வைக்க வேண்டும் என்று மக்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற மாதிரி எங்களுடைய பணிகள் நிச்சயம் இருக்கும்.

பேரவைத் தலைவர் அவர்களே! இந்த அரசு பொறுப்பேற்ற நிகழ்ச்சியில் நடந்த ஒரு நிகழ்வை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் மிகப்பெரிய ஒரு கோபத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அதை எதிர்க்கட்சிகள் எல்லோரும் விமர்சித்திருக்கிறோம். அதற்கு ஆளுங்கட்சியும் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள், நானும் பார்த்தேன். எங்களது கருத்து என்னவென்றால், பா.ஜ.க ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய மேற்குவங்க மாநிலத்தில் பதவி ஏற்பு நிகழ்ச்சியின் போது 'வந்தே மாதரம்' பாடல் பாடப்படவில்லை. ஆனால் இங்கே தமிழ்நாட்டில் அது பாடப்பட்டிருக்கிறது.

### ஆளுநர் உரையில் தவறு நடந்து விடக் கூடாது!

மேற்குவங்கத்தில் இன்றைக்கு யார் ஆளுநராகச் சென்று உட்கார்ந்து இருக்கிறார் என்று உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் இங்கே ஆளுநராக இருந்தபோது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று பேரவையின் மரபையே மாற்றச் சொன்னவர்தான் இன்றைக்கு மேற்குவங்கத்தில் ஆளுநராக இருக்கிறார். அதை நாங்கள் உறுதியாக, எங்களது தலைவர், அப்போதைய முதலமைச்சர் உறுதியாக மறுத்தார். அதனால் 2023ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று வருடம் அவர் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்துவிட்டுச் சென்ற காட்சிகளை எல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள்.

இதன் மூலமாக நாங்கள் சொல்ல வருவது, அடுத்து விரைவிலேயே இந்தப் பேரவையில் ஆளுநர் உரை நிகழ்த்தவிருக்கிறார். ஆகவே ஏற்கனவே உங்கள் அரசின் பதவியேற்பு விழாவில் நடந்த அந்தச் சம்பவம், அந்தத் தவறு மீண்டும் இந்தப் பேரவையில் நடப்பதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது, நாங்களும் அனுமதிக்க மாட்டோம்.

பேரவையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, தமிழ்த்தாய் வாழ்த்து என்றைக்கும் இரண்டாவது இடத்திற்கு நாம் தள்ளிப்போக விடக்கூடாது. இந்த அரசு அதற்கு அனுமதிக்கக்கூடாது என்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

மிகவும் விழிப்போடு இருந்து நம்முடைய உரிமையை, மரபைப் பாதுகாக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் வலியுறுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, வண்டிக்கு பிரேக் எப்படியோ, ஒரு காளைக்கு மூக்கணாங்கயிறு எப்படியோ, அப்படித்தான் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லி இருக்கிறார்.

ஆகவே பேரறிஞர் அண்ணா சொன்ன வழியில் ஆளுங்கட்சியின் செயல்பாட்டை உற்று நோக்கி உங்களின் நிறைகளை, குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக நாங்கள் நிச்சயமாகச் செயல்படுவோம்.

இந்த அவைக்குப் புதியவர்கள், முதல் முறை சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். அதில் மிகுந்த மகிழ்ச்சி. அதேபோல நீண்ட வருடங்களுக்குப் பிறகு நிறைய பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இடம் பெற்று இருக்கிறீர்கள். அதில் எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி. அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும், வளர்ச்சிக்காகவும் நாம் எல்லாரும் சேர்ந்து ஒன்றாகப் பயணிப்போம். எது எப்படியானாலும் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைப்படி எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதை உறுதி செய்கின்ற வகையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து நாங்கள் நிச்சயம் செயல்படுவோம்.

நடந்து முடிந்த தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை ஆளுங்கட்சிக்கு மக்கள் வழங்காமல் போனாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தேர்தலைச் சந்தித்து வென்ற தோழமை இயக்க சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு ஆட்சி அமைத்திருக்கக்கூடிய புதிய அரசிற்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி. உங்களுடைய பணிகள் சிறக்கட்டும். மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்க தமிழ், வாழ்க தமிழ்நாடு! மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.